1971 டிசம்பர் 15]

குங்குமப்பூ பயிரிடுதல்

*** 432 வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குங்குமப்பூ பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குங்குமப்பூ பயிரிட இயலுமா என்பது பற்றி சில சோதனைகளே தற்போது நடத்தப் பட்டு வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த சோதனைகள் எப்போது முடிவடையும்? எப்போது அதனுடைய விளைவுகள் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம்தான் காஷ்மீரிலிருந்து குங்குமப்பூ குருத்துக்கள் தருவிக்கப்பட்டன. அது கோடைக்கானலில் பயிரி டப்பட்டு வருகிறது. அங்கே சோதனைகள் முடிவடைந்த பிறகு, முடிவு தெரிவிக்கப்படும்.

பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

*** 433 வினா.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவது போல் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் அரிசன நலத்துறையிலிருந்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை யிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிறப்பாக பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும், கிராமப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட, வீடற்ற ஏழை மக்களுக்கு இயன்ற அளவு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். இதைக் கருத்திற் கொண்டு 1969-ல் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது இன்னும் செயலிலுள்ளது.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இதற்கு முன்பாக இல்லாவிட்டாலும், இனிமேலாகிலும் அதைப் பரிசீலித்து, பெரும் பாலும் பின்தங்கிய வகுப்பினராக உள்ளவர்களுக்கு, கிராமப் புறத்தில் இருக்கும் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த நிலப் பட்டா வழங்கு விஷயத்தில். போர் முனையில் பணியில் இருக்கும் அல்லது ராணுவத்தில் உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கு, நிலம் இல்லாத அரிசனங்களுக்கு, நிலம் இல்லாத ஏழைமக்களுக்கு, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு, பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு, தங்ககட்டுப்பாடு சட்டத்தின் காரணமாக வேலையிழந்தோருக்கு, நிலப்பட்டா வழங்கப்படும் என்று அரசாங்கக் கொள்கை வழக்கத்தில் இருக்கிறது. இதில் நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு என்று வருகிற பட்டியலில் இந்த பின் தங்கிய வகுப்பினர்களுக்கு நிலப் பட்டா வழங்கி வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, பட்டா வழங்குவதில் ஏதேனும் கஷ்டம் இருந்தால், இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளில் பிற்பட்டவகுப்பினர்களுக்கு ஏதாவது சலுகை காட்ட முடியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படும் வீடுகளில் தனிப்பட்ட சலுகை பிற்பட்ட வகுப்பினருக்கு என்று காட்ட முடியாது. பணம் கொடுப்பவர்கள் அத்தனை பேருக்கும் வீடுகள் கட்டித்தரப்படுகிறது.

வந்தவாசியிலுள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

* 434 வினா.—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் உள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் 1969-70-ம் ஆண்டு வரை எத்தனை வீடுகள் கட்ட கடன் வழங்கி இருக்கின்றது?

(இ) அதை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஒன்று.

(இ) அதிக எண்ணிக்கையில் கடன் மனுக்களைப் பெற்று சங்கத்தின் பணிகளை ஊக்குவிக்குமாறு திருவண்ணாமலை கூட்டுறவு துணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த வந்தவாசியில் உள்ள கூட்டுறவு வீடு கட்டித்தரும் சங்கம் சுமார் 30 ஆண்டுகாலமாகச் செயல்படாமல் இருக்கிறது. இந்த 30 ஆண்டுக் காலத்தில் 3 வீடுகள்தான் கட்டித்தரப்பட்டு இருப்பதால். உடனடியாக அரசு வேறு போர்டை நியமிக்க முடிவு எடுத்து ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.